**05.03.2026.**
**MCOP.No.69/2023**
**ம.சா.1 : ரம்யா**

**<u>மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுவதற்காக திரும்ப வரவழைக்கப்பட்டு கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>:-**

30.10.2021 தேதிய எனது கணவர் சுப்ரமணி அரிசி, காய்கறி கடை வைத்திருந்ததற்கான பதிவு சான்றிதழ் 2024 வரை அசல் ம.சா.ஆ.58. 30.10.2021 தேதிய எனது கணவர் சுப்ரமணி அரிசி, காய்கறி கடை வைத்திருந்ததற்கான அடையாள அட்டை 2024 வரை ம.சா.ஆ.59 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.58ல் ஆவணப்படி என்ன பொருட்களை வாங்கி விற்றோம் என்பதற்கான வரவு செலவு கணக்கினை பராமரித்து வந்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணம் வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடையை மூடிவிட்டேன் என்பதற்கான ஆவணத்தை நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடையை தற்போது வரை நான் பார்த்து கொண்டிருக்கிறேன் என்றும் அதனால் தான் கடையை மூடிவிட்டதாக சொல்வதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் மனுவில் சொல்வதுபோல என் கணவர் இறந்துவிட்டதால் கடையை மூடிவிட்டேன் என்றும் அதனால் வருமான இழப்பு ஏற்பட்டது என்று நான் சொல்லி உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2026.03.05 17:22:22 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**